பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 10 புதன்கிழமை 27.10.2021 கதிர் 219

## இந்திய மீனவர்கள் 2 பேரும் விடுதலை

(இ.கலையமுதன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் கைதான இந்திய மீனவர்களை ஊர்காவற்றுறை நீதி மன்றம் இன்று விடுதலை செய்து உத்தர விட்டுள்ளது.

2

### ஒரே நாடு - ஒரே சட்டத்தைச் செயற்படுத்த

# ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி நியமனம்

## தமிழர்கள் எவரும் இல்லை; கோட்டாபயவின் தீர்மானத்துக்குச் சுமந்திரன் கடும் கண்டனம்



அரசமைப்பின் 33ஆவது உறுப்புரிமையின் பிரகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இலங்கையினுள் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதை செயற்படுத்தும் சட்ட வரைபைத் தயாரிக்க 13 பேரை உள்ளடக்கிய விசேட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளார்.

2



## ஜனாதிபதி செயலணியில் இன சமத்துவம் இல்லை!

### முன்னாள் சபாநாயகர் கரு குற்றச்சாட்டு



'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணியில் சமத்துவம் பேணப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆகவே, இந்தக் குழுவின் பன்முகத் தன்மையைப் பேணுவதற்காக மக்கள் கருத்தைப் பெற்றுக்

2

## மைத்திரி - மனோ திடீர் சந்திப்பு; தேர்தல் முறைமை குறித்து பேச்சு



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் சந்தித்துள்ளார்.

தேர்தல் முறைமை தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவதற்காகவும், அதுபற்றி கலந்துரையாடவுமே மைத்திரிபாலவை தான் சந்தித்தேன் என மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

2



## சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராக வவுனியாவில் வெள்ளி ஆர்ப்பாட்டம்

(வவுனியா நிருபர்)

வவுனியா வடக்கில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் செயற்பாட்டுக்கு எதிராக எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

மதவாச்சியில் உள்ள 1,330 சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்குபிரிவில் இணைத்து இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது எனத் தமிழ்

2




## மத அடையாளங்களை அமைக்க ஆரியகுளத்தில் அனுமதி இல்லை

### யாழ். மாநகர சபையில் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான ஆரியகுளத்தில் எந்தவிதமான மத அடையாளங்களையும் அமைக்க அனுமதிக்க முடியாது என மாநகர சபையில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


2



## உருக்குலைந்த நிலையில் சடலம்

கேகாலையில் ஆணின் சடலம் ஒன்று அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

2



## குளவி கொட்டி 18 பேர் பாதிப்பு

புத்தளம், முந்தல் தேவாலய சந்திப் பகுதியில் இன்று காலை குளவிக் கொட்டுக்கு இலக்கான 18 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2

## வடமராட்சி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்



(எஸ்.நிதர்ஷன்)


யாழ்., வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பூது வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

பொன்னுத்துரை காண்டீபன் (வயது 40) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இவர், தற்போது வதிரியில் வசிக்கின்றார். சாவகச்சேரியிலிருந்து வதிரிக்கு

2

## நவம்பர் 1 முதல் பூஸ்டர் தடுப்பூசி



நாட்டில் இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் பணி நவம்பர் முதலாம் திகதி தொடங்கும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ள வேண்டியதும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விளக்கமளித்து வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரே நாடு - ஒரே சட்டம் என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்கான வர்த்தமானி அறிக்கைக்கு அமைவாக, நபர்கள் சமமான நிலையில் மதிக்கப்படுகிறார்கள் என்பதை அந்தக் குழுவே முதலில் உறுதி செய்யவேண்டும்.

ஆனால், இந்தக் குழுவில் சகல இனப் பிரதிநிதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளோ, அல்லது பெண்களோ உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இதன் உள்ளக பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்காகப் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## வடமராட்சி விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பால வேலைக்காக வெட்டப்பட்ட கிடங்கில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவர் விழுந்துள்ளார்.

அவசர நோயாளர் காவு வண்டி ஊடாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நவம்பர் 1 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்கள சுகாதார ஊழியர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக வழங்கக்கூடிய 20 லட்சம் கொரோனா வைரஸ் தடுப்பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சின் வசம் இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

பூஸ்டர் தடுப்பூசிகளை நிறைவு செய்வதற்காக மேலும் ஒரு கோடி 45 லட்சம் தடுப்பூசி மருந்துகளுக்கான கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், கொரோனா வைரஸ் காரணமாக இலங்கை கல்வித்துறையில் பல பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளது என்று ஒப்புக்கொண்ட சுகாதார அமைச்சர், இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

## குளவி கொட்டி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முந்தல் வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.மாலிங்கம இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

மரமொன்றில் குளவிகள் கூடுக்கட்டியிருந்த நிலையில் அப்பகுதியில் வீசிய கடும் காற்றுகாரணமாக குளவிகள் கலைந்து, சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கொட்டியுள்ளன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## மத அடையாளங்களை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு இன்று மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தை நாக விகாரையின் விகாராதிபதிக்கு அனுப்பி வைப்பதாகவும் இன்றைய அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டது.

## இந்திய மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வாரம் காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் பயணித்த படகு, கடற்படையின் படகுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவத்தில் கடலில் வீழ்ந்த மீனவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டபோதிலும் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

மீட்கப்பட்ட மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்றிருந்த நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் சில நாள்களில் குறித்த மீனவர்கள் இருவரும் தாயகம் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மைத்திரி - மனோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சந்திப்பு மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது பற்றி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

தேர்தல் நடக்கப் போகின்றதோ, இல்லையோ தெரியாது. ஆனால், தேர்தல் முறைமையைப் பூரணமாக மாற்றி விகிதாசார முறைமையை ஒழித்து, கலப்பு முறைமையைக் கொண்டு வந்து, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி, இந்நாட்டில் இரண்டு கட்சி ஆட்சியை நிலை பெற செய்ய அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது.

இதற்கு உறுதுணையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கலப்பு முறைமையை ஆதரிக்கின்றது எனத் தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவுக்குழுவில் அறிவித்துள்ளார்.

இது ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் என்னிடம் நேரடியாக அறிவித்திருந்த நிலைப்பாட்டுக்கு முரணாக உள்ளது என நான் இந்தச் சந்திப்பின்போது முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இன்று நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கின்றது. இந்நிலையில், உத்தேச கலப்புத் தேர்தல் முறைமை தமிழ், முஸ்லிம் கட்சிகளை மட்டுமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளையும் அழித்து விடும் என்று மைத்திரிபாலவிடம் நான் எடுத்துக் கூறினேன்.

தற்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றன. கலப்பு முறைமையை எதிர்க்கின்றன.

கலந்துரையாடலின்போது, எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன, தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுவது பிழை. அங்கே எமது கட்சியின் நிலைப்பாடு சரிவரக் கூறப்படவில்லை. விரைவில் நமது கட்சியின் அதிகாரபூர்வ குழு அங்கே வந்து எமது நிலைப்பாட்டை அறிவிக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலப்பு முறைமையை ஏற்றுக்கொள்ளாது. நாம் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கலப்பு முறைமை இருக்கலாம். ஆனால், மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கு விகிதாசார முறைமையே சரியானது. இதுவே எங்கள் நிலைப்பாடு என்று மைத்திரிபால கூறினார் - என்றார்.

## உருக்குலைந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எட்டியாந்தோட்டை - மலல்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் அமுஹேன பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது என எட்டியாந்தோட்டைப் பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த ருவன்வெல்ல பதில் நீதிவான் நிமல் புஸ்பகுமார, மரண விசாரணையை நடத்தியதையடுத்து, கரவனெல்ல வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று எட்டியாந்தோட்டைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## சிங்களக் குடியேற்றத்துக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நிலத்தையும், இருப்பையும் காக்க தமிழ் மக்களை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணையுமாறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (100)

## ஞானசார தேரர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவராக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கடகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் தயானந்த பண்டார, பேராசிரியர் சாந்திநந்தன விஜயபண்டார, பேராசிரியர் சுமேத சிறிவர்தன, என்.ஜி.வ சுஜீவ பண்டிதரத்ன, சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன, சட்டத்தரணி சஞ்சய மாரம்பே, எரந்த நவரத்ன, பாணி வேவல, மௌலவி மொஹமட் (காலி உலமா சபை), விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப், கலீல் ரஹூமான், அஸீஸ் நிசார்தீன் ஆகியோர் செயலணியில் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். செயலணியில் தமிழ் உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படாமை கவனிக்கத்தக்கது.

செயலணியின் செயற்பாடுகளுக்கு அனைத்து அரச உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளமையுடன், பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வாறு விடயங்களை விசாரிப்பதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் செயலணிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

செயலணியின் உறுப்பினர்கள் மாதத்துக்கொரு முறை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், முழுமையான, இறுதி அறிக்கையை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தச் செயலணியை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்த ஞானசார தேரருக்கு 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனா திபதி செயலணியில் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளமை வேடிக்கையா னது எனவும் சுமந்திரன் எம்.பி. சாடியுள் ளார்.

இந்தச் செயலணியின் செயற்பாடுகளை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

**வவுனியாவில் வீடு வாடகைக்கு**

**நெளுக்குளம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.**

**தொடர்புகளுக்கு: - 0714841069**



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## கவனத்தைக் கவரும் வழக்கு

**கெரவலப்பிட்டியவில் உள்ள யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் இலங்கை அரசு கைச்சாத்து செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் சட்ட விரோதமானது, ஆகவே, அதனை ரத்து செய்ய உத்தரவிட வேண்டும் என்று கோரி ஜே.வி.பி. உயர்நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.**

**இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாட்டின் இறையாண்மையிலும் சுயாதீனத் தன்மையிலும், தேசியப் பாதுகாப்பிலும் அமெரிக்கா முறையற்ற விதத்தில் தலையீடு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாக ஜே.வி.பி. தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு எரிவாயுவை விநியோகிக்கும் அதிகாரம் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மின்சக்தி உற்பத்தி என்பது நாட்டின் தேசிய பாதுகாப்பிலும் காத்திரம் செலுத்தும் ஒரு விடயமாகும். இலங்கையின் வலு மற்றும் சக்தி மூலங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பிற நாடுகளுக்கு ஒப்படைக்கப்படுமாயின் அந்நாடு இலங்கையின் சுயாதீன தன்மையிலும் இறையாண்மையிலும் தேசிய பாதுகாப்பிலும் அதீத தலையீடு செய்ய முடியும் என்று ஜே.வி.பி. தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது.**

**அமெரிக்கா இந்தத் திட்டத்தின் மூலம் தலையீடு செய்யவும், இதேபோன்று இதற்கு பதிலாகக் கையளிக்கப்படும் வெவ்வேறு வேலைத்திட்டங்களின் மூலம் இந்தியாவும் சீனாவும் தலையீடு செய்யவும் வாசல்கள் திறந்து விடப்படுகின்றன என்று ஜே.வி.பி. குமுறியிருக்கின்றது.**

**இந்த மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஜே.வி.பி. தரப்பில் முன்வைக்கப்பட்ட ஒரு விடயம் கவனிக்கத்தக்கது. நாட்டின் ஜனாதிபதியும் நிதியமைச்சரும் அமெரிக்க பிரஜைகள். அவர்கள் அந்த நாட்டுக்குச் சார்பாக செயல்பட்டு, இலங்கையின் எதிர்காலத்தை ஆபத்துக்கும் கேள்விக்கும் உள்ளாக்கப் போகின்றனர் என ஜே.வி.பி. தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. இலகுவாக புறம் ஒதுக்கி விட முடியாத குற்றச்சாட்டு இது.**

**இந்த மின்சார நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு திடுதிப்பென இலங்கை கையளித்தமையின் பின்னணியில் பல ஆழமான இரகசியங்கள் பொதிந்து இருக்கின்றன என ஆளும் பொதுஜன பெரமுன கூட்டமைப்பின் பத்து பங்காளிக் கட்சிகளும் கூட ஒரே குரலில் ஆட்சேபனை தெரிவித்து வருகின்றமையும் கவனிக்கத்தக்கது.**

**இந்த விடயத்தை ஒட்டி மேலும் சில தரப்புகள் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளன. குறிப்பாக, பௌத்த மதத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் இந்த விடயத்தில் அரசின் நடவடிக்கையை வலுவாக கண்டித்து வருகின்றமையும் நோக்கத்தக்கது.**

**மேற்படி அமெரிக்க நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தென்னிலங்கையில் அரசுக்குள்ளும், அரசுக்கு வெளியிலும், மக்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தையும் கருத்து முரண்பாட்டையும் ஏற்படுத்தியிருப்பதும் கண்கூடு.**

**ஆயினும், இத்தகைய ஒப்பந்தங்களைச் செய்யும் அரசாங்கத்தினுடைய அதிகாரத்தில் – தற்றுணிவுப் பிரயோகத்தில் – உயர் நீதிமன்றம் தலையிடுமா என்பது கேள்வியே. எனினும் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் முன்வைக்கப்படும் மனு தாரர்களின் சிரத்தைகளையும் வாதங்களையும் உயர் நீதிமன்றம் இலகுவாகப் புறந்தள்ளிவிட முடியாது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.**

**எது, எப்படி என்றாலும் இலங்கை அரசியலின் போக்கைத் தீர்மானிக்கப் போகின்ற ஒரு விவகாரமாக இந்த வழக்குகள் அமையப் போவது தென்படுகின்றது.**

**நீதிமன்றம் இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றால், அதுவே இவ்விடயத்தில் அரசினுடைய நிலைப்பாட்டில் ஒரு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கத்தக்கது.**

**இந்தக் காலகட்டத்தில் எல்லாத் தரப்பினரதும் கவனத்துக்கு உள்ளாகி இருக்கின்றது இந்த வழக்கு.**

# இந்தியாவுடன் பகைத்தாலும் மக்களை பாதுகாக்க வேண்டும்!

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்



இந்தியாவுடன் பகைத்தாலும் மக்களை பாதுகாக்க வேண்டும், எங்களது வளங்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை நிறுத்துவதற்கு எமது அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் எங்களுக்கு முழு ஆதரவு வழங்குகின்றனர்.

இந்தியாவுடன் பகைத்தாலும் எமது மக்களை பாதுகாக்கவும் வளங்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

விரைவில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் நான் மட்டக்களப்புக்கு வருகை தந்து இங்குள்ள பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவேன்.

சஜித் பிரேமதாஸ தனது தேர்தலுக்காக வீட்டுத்திட்டம் என்ற ஒன்றை பயன்படுத்திக் கொண்டார். மக்களுக்கு கொஞ்சகொஞ்ச காசை வழங்கி வாக்கை அபகரிக்க நினைத்தார் முடியவில்லை. எங்களது கஜானா காலியாகவுள்ளது. கைவிடப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்துக்கான மிகுதி பணத்தை வழங்கக்கூடிய நிலையில்லை. இது மட்டக்களப்பில் மட்டுமன்றி முழு நாட்டுக்குமான பிரச்சினை.

தற்போது இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு தற்காலிகமானது. ஜனாதிபதி கோட்டா எவ்வாறு இந்த நாட்டில் இருந்த வன்முறைக்கு தீர்வுகண்டாரோ, இந்த நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தலை கட்டுப்படுத்தினாரோ அதேபோன்று இந்த பொருளாதார, மக்களின் வாழ்வாதார பிரச்சினையையும் தீர்த்து வைப்பார் என்று நம்புகின்றோம். இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை விவகாரம் தவறுகள் எங்கும் நடக்கின்றன. இதனை எல்லா இயக்கங்களும் எல்லோரும் செய்த செயற்பாடு தான். அதனை நாங்கள் பெரிதுபடுத்த முடியாது. இது அரசாங்கத்தின் கொள்கையில்லை. அது தனிமனித விவகாரம்.

அவர் அவ்வாறு நடந்துகொண்டாரா இல்லையா என்பதையறிய விசாரணை நடைபெற்று வருகின்றது. அதன் பின்னரே அது உண்மையா பொய்யா என்பது தெரியும்.

2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்னும் அமைப்பு ஒரு குறிப்பிட்ட பெண்மணியின் பெயரைக்கூறி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் என அந்த அமைப்பு கூறியிருந்தது. அந்த அமைப்பு தற்போது குறித்த பெண் உயிருடன் உள்ளார் எனச் சொல்லப் போகின்றார்கள். இவ்வாறு பல பொய், பித்தலாட்ட செயற்பாடுகள் உள்ளன என்று குறிப்பிட்டார்.

# கொடூரமாகத் தாக்கப்பட்டு ஆண் ஒருவர் படுகொலை!

## பேலியகொடையில் சடலம் மீட்பு

ஆண் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரின் சடலம் பேலியகொடை – வனவாசல வீதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் மீட்கப்பட்டுள்ளது எனக் களனிப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ரொஸான் டயஸ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மேற்படி ஆணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுமார் 35 வயது மதிக்கத்தக்க நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். – என்றார்.

# சேதன உர விவகாரம்! சீன நிறுவனம் காட்டம்

சீனாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள சேதன உரங்களை, இரு தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரைக் கொண்டு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உரங்களை வழங்கும் சீன நிறுவனமான குவின்ங்டாவோ சீவின் பயோடெக் குருப் கம்பனி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சேதன உரத் தொகைக்கான கடன் கடிதம் செப்ரெம்பர் 17 அன்று திறக்கப்பட்டது என்றும் கடன் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விநியோக திகதிக்கு ஏற்ப செப்ரெம்பர் 23 அன்று உரத் தொகை அனுப்பப்பட்டது என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. உரத்தின் இருப்பு சரியான நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்காக வாங்குபவர் செயற்கையான தடையை உருவாக்கினார் எனச் சந்தேகிக்க நியாயமான காரணங்கள் இருக்கின்றன எனவும் அந்த நிறுவனம் கூறுகிறது.

இதன்படி, இரு தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் மூலம் மீண்டும் விசாரணை நடத்தி, உரகையிருப்பில் அர்வினியா பாற்றீரியா இருப்பது உறுதி செய்யப்பட்டால், ஒப்பந்தத்தை ரத்துச் செய்து, உர இருப்புகளை அகற்ற வேண்டும்.

பற்றீரியா இல்லை என உறுதி செய்யப்பட்டால், இலங்கை ஊடகங்கள் உடனடியாக அது தொடர்பான செய்திகளை சரிசெய்து, பொய்யான செய்திகளை வெளியிடுவதற்கான சட்ட நிலை குறித்து ஆராய வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், இலங்கை அரசாங்கத்தின் கொள்வனவு செயற்பாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம், அத்துடன், சீன நிறுவனங்களுடனான எதிர்கால கொடுக்கல் வாங்கல்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சூடானில் உள்நாட்டுப் போரைத் தடுக்க இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதாம்

உள்நாட்டுப் போரை தடுக்க இராணுவம் கடந்த திங் கட்கிழமை முதல் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக சூடானின் ஆட்சிக்கவிழ்ப்புத் தலைவர் ஜெனரல் அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் அறிவித்துள் ளார்.

பாதுகாப்பிற்காக தளபதியின் வீட்டில் காவலில் வைக்கப்பட்ட பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் அப்தல்லா ஹம்டோக் இப்போது வீடு திரும்பியுள் ளார் என்று அவர் கூறினார்.

தலைநகர் கார்ட்டுமில் இரண்டாவது நாளாக வீதிகள், பாலங்கள், கடைகள் அடைத்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

மேலும் அங்கு தொலைபேசி மற்றும் இணைய சேவைகளும் முடக்கப்பட்டுள்ள நிலையில் அமைதியின்மை காரணமாக குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த வாரம் தாங்கள் கண்ட ஆபத்துகள் நாட்டை உள்நாட்டுப் போருக்கு இட்டுச் சென்றிருக்கலாம் என்ற நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக தளபதி தெரிவித்துள்ளார்.

# காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் ராணி கலந்து கொள்ளமாட்டாராம்



கிளாஸ்கோவில் நடைபெறும் COP 26 காலநிலை மாற்ற உச்சிமாநாட்டில் ராணி கலந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

95 வயதான அவர் வடக்கு அயர்லாந்திற்கான விஜயத்தை ரத்து செய்த பின்னர் கடந்த புதன்கிழமை மருத்துவ ஆலோசனையை தொடர்ந்து பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார்.

இருப்பினும் செவ்வாயன்று வின்ட்சர் கோட்டையிலிருந்து வீடியோ காணொலி மூலம் தூதுதர்களை சந்தித்து தனது நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கினார். இந்நிலையில் COP26 காலநிலை மாற்றஉச்சிமாநாட்டுவரவேற்புநிகழ்ச்சியில் ராணி கலந்து கொள்ளமாட்டார் என முடிவு செய்யப்பட்டுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது..



# அமெரிக்க செனட்டரால் பாலியல் வன்கொடுமை

## கிளிண்டன் உதவியாளர் பரபரப்பு தகவல்

அமெரிக்க செனட்டரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட விடயம் குறித்து ஹிலாரி கிளிண்டனின் முன்னாள் நெருங்கிய உதவியாளர் ஹூமா அபெடின் தனது புத்தகத்தில் எழுதியுள் ளார்.

அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ள குறித்த புத்தகத்தில் அவர், 2000 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், பெயரிடப்படாத அரசியல்வாதி தன்னை வீட்டிற்கு அழைத்து பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்றார் எனக் கூறியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், ஒபாமா காலத்தின் முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான திருமதி கிளிண்டனின் மிகவும் நம்பகமான உதவியாளர்களில் ஒருவராக அபெடின் காணப்படுகின்றார்.

அவர் 2001-09 க்கு இடையில் நியூயோர்க்கிற்கான அமெரிக்க செனட்ராக இருந்த கிளிண்டனுக்காக தனது பணியை மேற்கொள்ளும்போது இந்த பாலியல் வன்கொடுமை இடம்பெற்றதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

45 வயதாகும் ஹூமா அபெடின், செனட்டரின் அடையாளத்தையோ அல்லது அவரது கட்சியையோ வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டை விட்டு வெளியேறுவதற்கான தடை ஆஸ்திரேலியாவில் நவ.01 முதல் நீங்குகிறது



அனுமதியின்றி வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் அமுலில் உள்ள தடையை அடுத்த வாரம் நீக்குவதாக ஆஸ்திரேலியா அரசாங்கம் உறுதியளித்துள்ளது. கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முகமாக கடந்த 19 மாதங்களாக எல்லைக் கட்டுப்பாடுகள் அங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக்கொண்டிருந்தால் நவம்பர் முதலாம் திகதியில் இருந்து மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை இருக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதியும் உள்நாட்டவர்களுக்கே பொருந்தும் என குறிப்பிட்டுள்ள ஆஸ்திரேலியா அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கான கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளது. இருப்பினும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டு தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களை வரவேற்போம் என உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

# கடந்த ஆண்டு ஆசியாவில் அதிகளவு வெப்பநிலை பதிவு

## ஐ.நா. சபை அறிவிப்பு



ஆசியக் கண்டத்தில் அதிகளவான வெப்பநிலை, கடந்த ஆண்டு பதிவாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

கொப் 26 உச்சிமாநாட்டிற்கு சில தினங்களே எஞ்சியுள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபை இன்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொப் 26 உச்சிமாநாடு எதிர்வரும் ஞாயிற்றுகிழமை முதல் நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ஆசியாவின் வருடாந்த தட்ப வெப்பநிலை தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் ஐ.நா.சபையின் உலக வானிலை அமைப்பு, பிராந்தியத்தின் ஒவ்வொரு பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள் ளது.

ஆசியா முழுவதும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன எனவும் இதனால் மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் காரணமாக, சீனாவுக்கு 283 பில்லியன் டொலரும், இந்தியாவுக்கு 87 பில்லியன் டொலரும், ஜப்பானுக்கு 83 பில்லியன் டொலரும், தென்கொரியாவுக்கு 23 பில்லியன் டொலரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# இஸ்ரேல் நாட்டிலிருந்து கப்பல் மூலம் தமிழகம் வந்த உரம் மாநிலம் முழுவதும் அனுப்பி தட்டுப்பாட்டை நீக்க திட்டம்

தமிழகத்தில் உரத்தட்டுப்பாட்டை நீக்க இறக்குமதி செய்யப்பட்ட 27 ஆயிரம் தொன் உரம் இஸ்ரேல் நாட்டிலிருந்து கப்பல் மூலம் தூத்துக்குடி வந்தடைந்தது.

வடகிழக்கு பருவமழை பெய்யத் தொடங்கியதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளில் விவசாயிகள்தங்கள்விவசாயப்பணிகளை தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் தமிழகத்தில் நிலவும் உரத்தட்டுப்பாட்டை நீக்க முதல்வர் மு.க. ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவந்தனர்.

இதனையடுத்து, இஸ்ரேல் நாட்டில் இருந்து சுமார் 27 ஆயிரம் தொன் பொட்டாஷ் உரம், கப்பல் மூலம் இறக்குமதி செய்வதற்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி இஸ்ரேல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட உரம் தூத்துக்குடி துறைமுகத்தில் நேற்று இறக்கப்பட்டது. இதனைத் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து அவர் ஊடகவியலாளர்களோடு உரையாடியபோது, இந்த பொட்டாஷ் உரத்தை 50 கிலோ மூடைகளாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சாலை வழியாக அனுப்பும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்து அனைத்து இடங்களிலும் உரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று தெரிவித்தார். இந்தக் கள ஆய்வின்போது தூத்துக்குடி மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் முகைதீன் உள்ளிட்ட அதிகாரிகளும் உடனிருந்தனர்.




# பாகிஸ்தானின் கிரிக்கெட் வெற்றியைக் கொண்டாடிய ஜம்மு காஷ்மீர் மாணவர்கள் மீது வழக்குப்பதிவு



டுபாயில் ஞாயிற்றுக்கிழமை நடந்த ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தான் அணியின் வெற்றியைக் கொண்டாடியதற்காக, ஸ்ரீநகரில் உள்ள மருத்துவ மாணவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் (UAPA) பொலிஸார் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றதை ஜம்மு காஷ்மீரின் பல இடங்களில் கொண்டாடிய காணொலிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன, பல பகுதிகளில் பட்டாசுகளும் வெடித்தன. எனவே, இது தொடர்பாக கரண் நகர் மற்றும் சௌரா பொலிஸ் நிலையங்களில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்கிம் சௌரா கல்லூரி மாணவர்கள்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சூழலில், மனிதாபிமான அடிப்படையில் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவர்கள் மீதான பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை திரும்பப் பெறுமாறு ஜம்மு காஷ்மீர் மாணவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தேசிய செய்தித்தொடர்பாளர் நசீர் குஹேமி வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவர்கள் மீதான UAPA குற்றச்சாட்டுகள் கடுமையான தண்டனையாகும். இது அவர்களின் எதிர்காலத்தை அழித்து அவர்களை மேலும் அந்நியப்படுத்தும். நாங்கள் அவர்களின் செயலை நியாயப்படுத்தவில்லை. ஆனால், இந்த நடவடிக்கை மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கும் என்று தெரிவித்துள்ளார்.


# சிவசங்கர் பாபாவுக்கு இரண்டாவது வழக்கிலும் சிறப்பு நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டது



சுஷில் ஹரி பாடசாலையின் நிறுவனர் சிவசங்கர் பாபா மீது அந்தப்பாடசாலையின் முன்னாள் மாணவிகள் பாலியல் தொல்லை தொடர்பாக புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து, டெல்லியில் வைத்து சிவசங்கர் பாபாவை பொலிஸார் கைதுசெய்தனர். அவர்மீது போக்சோ சட்டத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில், ஒரு வழக்கில் கேளம்பாக்கம் சுசில் ஹரி பள்ளி நிறுவனர் சிவசங்கர் பாபாவிற்கு செங்கல்பட்டு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. 3 போக்சோ வழக்கில் இரண்டு வழக்குகளில் சிவசங்கர் பாபாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளபோதிலும் மேலும் ஒரு போக்சோ வழக்கில் சிவசங்கர் பாபாவின் பிணை மனு நிலுவையில் உள்ளதால் அவர் சிறையில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டுள்ளார்.

# ம.தி.மு.கவில் சேரும் எண்ணம் இல்லை பேச்சாளர் நாஞ்சில் சம்பத் பேட்டி



ம.தி.மு.கவில் கொள்கை பரப்பு செயலாளராக இருந்த நாஞ்சில் சம்பத், கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ம.தி.மு.கவில் இருந்து விலகி அ.தி.மு.கவில் இணைந்தார். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் சசிகலா, தினகரன் ஆகியோரை அவர் ஆதரித்தார். அதன்பின்பு தினகரனிடம் இருந்தும் விலகியதோடு கட்சி அரசியலுக்கு முழுக்குப் போடுவதாகவும் இலக்கியக் கூட்டங்களில் மட்டுமே பங்கேற்பேன் எனவும் கூறினார்.

சட்டசபைத் தேர்தல் நேரத்தில் நாஞ்சில் சம்பத் தி.மு.க. கூட்டணியைஆதரித்துப்பேசியிருந்தார். அவர் மீண்டும் ம.தி.மு.கவில் இணைய உள்ளார் என அண்மையில்தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அது பற்றி அவர் வழங்கியபேட்டியில், துரைவைகோவிற்கு ம.தி.மு.கவில் பொறுப்பு வழங்கியிருப்பது வைகோ எடுத்திருக்கும் ராஜதந்திரமான முடிவாகும். சுமையைப்பகிர்ந்துகொள்வதற்காகவும், ம.தி.மு.கவிற்கு புத்துயிர் ஊட்டுவதற்காகவும் துரை வைகோ ஒரு கருவியாக இருப்பார். அவரை நியமிக்காமல் வேறு யாரை நியமித்திருக்க முடியும்?

ம.தி.மு.க. இயக்கம் துப்பாக்கி ஓசையை விட, பூகம்ப வேகத்தை விட வேகமாக செயல்படும் இயக்கமாகும். திராவிட இயக்கத்தின் கோட்டை தமிழகம் என்பதை நிரப்ப ம.தி.மு.க. முக்கிய பங்கு வகிக்கும். வாரிசு அரசியல் என்பது வேறு, வரலாற்று அரசியல் என்பது வேறு. ம.தி.மு.க. அதிகாரத்திற்கு வரும் கட்சி அல்ல. போராட பிறந்த கட்சியாகும். போராட்டக்களத்தில் துரை வைகோவிற்கு நான் துணை நிற்பேன், என்று குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் 100 ஆண்டு கால வரலாற்றில் கடந்த 5 மாதங்களாக நடைபெற்று வரும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக ஆட்சியில் யாரும் செய்ய முடியாத சாதனையை அவர் செய்துள்ளார். மிகக் குறுகிய காலத்தில் நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக ஸ்டாலின் ஆட்சி நடத்திவருகிறார் என்று பாராட்டியிருக்கும் அவர், அ.தி.மு.க. விடயத்தில் சசிகலாவின் நடவடிக்கைகள் பற்றிய கேள்விக்கு, அ.தி.மு.கவை கைப்பற்றும் இடத்தில்தான் சசிகலா உள்ளார் என்றும் அவரை யாரும் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

திராவிட இயக்கத்தின் செயல்பாட்டாளராக கடந்த 5 ஆண்டுகளாக இயங்கி வருகிறேன். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கட்சியில் சேர அழைப்பு விடுத்தார். நான் எனது பங்களிப்பைத் தருகிறேன் என்று கூறி அதை நிரூபித்துள்ளேன். துரை வைகோவிற்கு உதவிகரமாக இருக்கத் திட்டமிட்டு உள்ளேன்.

ஆனால், கட்சியில் சேரும் எண்ணம் இல்லை. திராவிட இயக்கத்தின் செயல்பாட்டாளராக தொடர்ந்து செயல்படுவேன், என்று தனது முடிவையும் நாஞ்சில் சம்பத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

# மக்களுக்குத் தொல்லை தருவதில் மோடி அரசு புதிய சாதனை பிரியங்கா காந்தி தனது டுவிட்டர் பதிவு மூலம் கடும் விமர்சனம்

மக்களுக்குத் தொல்லை தருவதில் மோடி அரசு புதிய சாதனைகள் படைத்துவருவதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

பெற்றோல், டீசல் விலை வரலாறு காணாத அளவு உயர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டி டுவிட்டரில் பதிவு ஒன்றை பிரியங்கா காந்தி இட்டுள்ளார்.

நாட்டில் முன் எப்போதும் இல்லாத வகையில் வேலைவாய்ப்பின்மை, அரசுச் சொத்துகள் விற்பனை, பெற்றோல், டீசல் விலை போன்ற அனைத்தும் உயர்ந்திருப்பதாகவும் இது போன்ற முறையில்தான் மோடி அரசு சாதனைகளைப் படைத்து வருவதாகவும் பிரியங்கா சாடியுள்ளார்.

இதற்கிடையில் பெற்றோல், டீசல் விலை தொடர் உயர்வை எதிர்த்து பெரிய அளவில் போராட்டம் நடத்த காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் நவம்பர் 14 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நாடு தழுவிய போராட்டம் நடத்தப்படும் எனகாங்கிரஸ்பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் தெரிவித்துள்ளார். பல்வேறு மாநிலங்களில் அந்தந்தப் பகுதிகளில் காங்கிரஸ் பிரமுகர்கள் பாதயாத்திரையும் செல்வார்கள் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

# சம்மாந்துறையில் விவசாயிகள் உரம் கேட்டு போராட்ட ஊர்வலம்



விவசாயிகள், விவசாய அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலியின் தலைமையில் யூரியா இரசாயன உரம் பெற்றுத் தருமாறும் அதிகரிக்கப்பட்ட பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறும் வலியுறுத்தி போராட்ட ஊர்வலம் ஒன்று நேற்று சம்மாந்துறையில் இடம்பெற்றது..

சம்மாந்துறை விளினையடி சந்தியில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் நடை பவனியாக ஹிஜ்ரா சந்தி ஊடாக சுமார் இரண்டு கிலோமீற்றர் நடை பவனியாக சென்று சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு சென்றது.

இதன்போது பட்டம்பிட்டி வயல் பிரிவு குழுத்தலைவர் மற்றும் ப்ளாக் ஜே வயல் பிரிவு குழுத்தலைவர் ஆகியோரால் சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது மகஜரில் உள்ள விடயங்கள் வாசித்தும் காட்டப்பட்டது. இந்த மகஜரில் விவசாயிகளின் அடிப்படைத் தேவையான இரசாயன உரத்தினை பெற்றுத்தருமாறு குறித்த அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

# மிருகவதைச் சட்டத்தில் இருவர் கைதாகினர்

மட்டக்களப்புவாழைச்சேனைபிராதான வீதி வழியாக பாரவூர்திகளில் கொண்டு செல்லப்பட்ட கால்நடைகளை மீட்டுள்ளோம் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பூரணத்துவம் இல்லாத ஆவணங்களை வைத்துக் கொண்டு மாடுகளை ஏற்றிச் செல்வதற்கேற்றவசதிகளற்றவாகனங்களை பயன்படுத்தியமைதொடர்பாகமிருகவதைச் சட்டத்தின் கீழ் இரு வாகனங்களை கைப்பற்றியதுடன் அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை மூதுர் பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு வவுணதீவு பகுதிக்கு கொண்டு சென்ற 29 மாடுகளே மீட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன .

கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் வாகனம் போன்றவற்றை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் சம்மாந்துறை வலயத்திற்கு விஜயம்



கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையிலான உயர்கல்வி அதிகாரிகள் குழாத்தினர், க.பொ.த.சா.தர பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்கள் தொடர்பாக சூழ்நிலைப்பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக இன்று புதன்கிழமை சம்மாந்துறை வலயத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

சம்மாந்துறை வலயத்திற்கான சூழ்நிலைப் பகுப்பாய்வுக்கூட்டம் இன்று 27ஆம் திகதி புதன்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சுகாதார நடைமுறைக்கமைவாக நடைபெற்றது.

வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல்நஜீம் தலைமையிலான வலயகுழுவினர் வலயசெயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிப்பும், கிழக்குமாகாணத்தில் க.பொ.த. சாதாரணதர பரீட்சை அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு பலவேலைத் திட்டங்களை முன்னெடுக்க கிழக்குமாகாண கல்வித்திணைக்களம் வேலைத்திட்டங்களை தயாரித்துள்ளது.

அதன் ஓரங்கமாக, வலயரீதியான சூழ்நிலைப் பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளகிழக்குமாகாணகல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையிலான உயர்கல்வி அதிகாரிகள் குழாத்தினர் வலயங்களுக்கு நேரடியாக விஜயம் செய்கின்றனர்.

அதன்பொருட்டு 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் குறித்த வலயத்தில் க.பொ.த.சாத. பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற மாணவர்கள் நிலைமை தொடர்பாக சூழ்நிலைப்பகுப்பாய்வொன்றை முன்னெடுக்க வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாகாணக்கல்விப்பணிப்பாளர் தலைமையிலான குழாத்தினரின் விஜயத்தின்போது கல்விசார் உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், க.பொ.த.சாத. பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் பிரசன்னமாகியிருக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்காக அந்தந்த வலயங்கள் முன்னெடுத்த, முன்னெடுக்கவிருக்கின்ற செயற்றிட்டங்கள் விசேட திட்டங்கள், கடந்த 5 வருடகால பெறுபேறுகளின் பகுப்பாய்வுச்சுருக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் பாடரீதியாக ஆராயப்படவுள்ளன. அவை பல்லூடக முன்வைப்பாக காட்சிப்படுத்தப்படவேண்டும் என வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதிபர் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களதும் 2021ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை தரங்கணிப்பீட்டுத்திட்ட அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது .

# மிளகாய் தூள் தூவி பகலில் கொள்ளை

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பிரதான வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றில், பட்டப்பகலில் கொள்ளையிட்ட சந்தேகத்தில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருவதாவது, நேற்று பிற்பகல் நகைக் கடைக்குள் நுழைந்த சந்தேகநபர், கடையில் இருந்த நபருக்கு மிளகாய்த் தூள் விசிறி நகைகளைக் கொள்ளையடிக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது, நகைக் கடையில் இருந்த நகைக்கடை உரிமையாளரின் மருமகனுக்கும் சந்தேகநபருக்கும் இடையில் சண்டையிடும் காட்சிகள், அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடை உரிமையாளர் மற்றும் பொதுமக்கள் இணைந்து குறித்த நபரை மடக்கிப் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என, கடை உரிமையாளர் தெரிவித்தார்.

# யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டுகோள்



கல்முனை பிராந்தியத்தில் அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி பொதுமக்களின் உடமைகளையும், சொத் துக்களையும் பாதுகாக்கும் நோக்கில் யானைவேலி அமைத்தல் தொடர்பில் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீரதிஸாநாயக்கவுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விளக்கமளித்து உடனடியாக அந்த வேலிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி வீட்டுத்திட்டம், கல்முனை கிரீன் பீல்ட் சுனாமி வீட்டுத்திட்டம், மருதமுனை பிரான்ஸ் சிட்டி சுனாமி வீட்டுத்திட்டம், குடுவில், வாங்காமம், நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்கள் அடங்கலாக அம்பாறையின் ஏனைய பிரதேசங்களில் யானையின் கெடுபிடி அதிகமாக உள்ளமையையும், இதனால் பொது மக்களின் அன்றாட இரவு பீதியில் உள்ளதையும் எடுத்துரைத்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் உடனடியாக மக்களின் உயிரையும், உடமைகளையும் பாதுகாக்க வேண்டி மிக அவசரமாக யானை வேலிகளை அமைக்குமாறு இராஜாங்க அமைச்சரை கேட்டுக்கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# பாகிஸ்தான் அணிக்கு இரண்டாவது வெற்றி அரையிறுதி வாய்ப்பினை பிரகாசமாக்கியது

ரி-20 உலகக் கிண்ண சூப்பர் - 12 சுற்றின் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூசிலாந்து அணி, பாகிஸ்தானின் துல்லியமான பந்துவீச்சில் ஓட்டங்களைக் குவிக்கத் தடுமாறி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களையே எடுத்தது. நியூசிலாந்து அணியின் டரில் மிச்செல், டெவோன் கொன்வே இருவரும் தலா 27 ஓட்டங்களையும், அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 25 ஓட்டங்களையும் சேர்த்தனர். பாகிஸ்தான் அணியின் ஹரிஸ் ரவுப் 22 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும், சஹீன் அப்ரிடி, இமாத் வஸீம் மற்றும் மொகமட் ஹபீஸ் மூவரும் தலா ஒரு விக்கெட் வீதமும் கைப்பற்றினர்.

பின்னர் களமிறங்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி வெற்றி இலக்கினை 18.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து அடைந்தது. பாகிஸ்தான் அணியின் மொஹமட் ரிஸ்வான் 33 ஓட்டங்களையும், சொஹைப்மலிக், ஆசிப்அலி இருவரும் ஆட்டமிழக்காது முறையே 26, 27 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதிப்படுத்தினர். நியூசிலாந்து அணியின் இஸ் சோதி 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஹரிஸ் ரவுப் தெரிவானார். ரி-20 உலகக் கிண்ணத் தொடரை இரண்டு வெற்றிகளுடன் வெற்றிகரமாக ஆரம்பித்துள்ள பாகிஸ்தான் அணி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ள, நியூசிலாந்து அணி தனது அடுத்த போட்டியில் வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவோடு மோதவுள்ளது.



## ரி-20 உலகக் கிண்ணத் தொடரில்

# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது சம்பியன் மேற்கிந்தியத் தீவுகள்

உலகக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் - 12 சுற்றுக்கான நேற்றைய முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

டுபாயில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகள் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. எவின் லூயிஸ் 56 ஓட்டங்களையும், கைரொன் பொலார்ட் 26 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்க அணியின் டுவெய்ன் ப்ரிடோரியஸ் 3 விக்கெட்டுக்களையும் கேசவ் மகராஜ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 144 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய தென்னாபிரிக்க அணி 18.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. எய்டன் மார்க்ரம், வன் டெர் டுசென் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 51, 43 ஓட்டங்களையும் ஹென்ட்ரிக்ஸ் 39 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 4 ஓவர்களில் ஒரேயொரு நான்கு ஓட்டம் உள்ளடங்கலாக 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்திய தென்னாபிரிக்க அணியின் அன்ரெக் நோர்க்கியா தெரிவானார்




# ஆசியக் கிண்ணக் கால்பந்தாட்ட தகுதிகாண் சுற்று சிரியாவிடம் அடி பணிந்தது இலங்கை அணி

2022 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள 23 வயதுக்குக் கீழான தேசிய அணிகளுக்கிடையிலான ஆசியக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் தகுதி காண் சுற்று கட்டாரில் ஆரம்பமாகியுள்ளது. அதன் ஏ - குழுவுக்கான தனது முதல் போட்டியில் இலங்கை அணி சிரியாவிடம் 5-0 என்ற கோல்கள் கணக்கில் தோல்வியடைந்துள்ளது.

இடைவேளைக்கு முன்னதாகவே 3 - 0 என்று முன்னிலை வகித்த சிரிய அணி, முடிவில் 5 - 0 என்ற கணக்கில் மிக இலகுவாக வெற்றிபெற்றது. சிரிய அணியின் அலி பஸ்மானி இரண்டு கோல்களையும், மொகமட் மல்டா, அல்ஹலாக் ஆகியோர் ஒவ்வொரு கோல்களையும் அடித்தனர். இலங்கை அணியின் பின்களத் தடுப்பாட்ட வீரர் அப்துல் பசித்தினால் தவறுதலாக அடிக்கப்பட்ட கோலினால் சிரியாவின் கோல் எண்ணிக்கை ஐந்து ஆனது.

இலங்கை அணி தனது அடுத்த போட்டியில் எதிர்வரும் 28 ஆம் திகதி கட்டார் அணியை சந்திக்கவுள்ளது. சிரிய அணி அதே தினத்தில் ஏமன் அணியை எதிர்த்தாடவுள்ளது.

# மீண்டும் ஓர் இரத்தக் களரி வெலிக்கடையில் ஏற்படலாம்!

## கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவிப்பு

தங்கள் உரிமைகளுக்காகப் போராடிய கைதிகள் குழுவை அடக்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில் –

வெலிக்கடை சிறைச்சாலையின் கூரையின் மீதேறி, ஒரு மாத காலத்திற்கும் மேலாக மரண தண்டனையை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வார இறுதியில் கலகத் தடுப்பு பொலிஸாருக்கு மேலதிகமாக சுமார் 200 மேலதிக சிறைக் காவலர்களும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உண்மைகளை விளக்கி, தாக்குதல் எதுவுமின்றி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாறெனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் தரையிறங்கிய பின்னர் குடிக்க தண்ணீர் கூட வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டும் சிறைக் கைதிகள் தொடர்பான ஆர்வலர்கள், அடக்குமுறை தீவிரமடையும் என்ற அச்சத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச மனிதஉரிமைஅமைப்புகள்உடனடியாக இந்தவிடயத்தில்தலையிடவேண்டுமென அழைப்பு விடுத்துள்ளனர்.

‘சிறைக்குள் இருக்கும் கைதிகளிடமிருந்து எமக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய, வெலிக்கடை சிறைச்சாலையை மீண்டும் இரத்தக் ஆறாக மாற்ற அரசாங்கம் அதிகப்படியான வன்முறையைப் பிரயோகிக்குமா என்ற அச்சம் நிலவுகிறது.’ என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

‘இந்தச் சூழலில், கைதிகளின் உயிரைக் காப்பாற்றவும், போராட்டக்காரர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கு எதிரான பழிவாங்கலைத் தடுக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். – என அதில் கூறப்பட்டுள்ளது. நீண்டகாலமாக, கைதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் வெறும் வாக்குறுதிகளுடன் மட்டுப்படுத்தாமல், காலவரையறையுடனான உங்கள் அமைப்புகளின் மேற்பார்வையின் கீழ் வெளிப்படையான திட்டத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம். – எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேராவின் கையொப்பமிடப்பட்ட கடிதத்தில் கடந்தவருடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல் நடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முதல் புதிய நடைமுறைகள்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) முதல் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிருந்து வருகை தரும் பயணிகள் 20 வினாடிகளுக்குள் விமானநிலையத்தைவிட்டுவெளியேறுவதற்கு காகிதம் அல்லது ஏனைய உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமின்றி புதிய இணைய முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் போது இணையத்தளத்தின் ஊடாக இந்த அமைப்பை அணுக முடியும் அல்லது விமான நிலைய வருகை வளாகத்தில் அமைந்துள்ள கியூ.ஆர். ஊடாக குறியீட்டு பலகைகளுக்குச் சென்று உங்கள் தகவலைச் சமர்ப்பிக்கலாம்.

அதன்படி வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் 72 மணித்தியாலங்களுக்கு முன்பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் தடுப்பூசி செலுத்திய அட்டை ஆகிய–வற்றை இந்த அமைப்பின் மூலம் இணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பயணிகள் வரிசையில் நிற்பது, ஆவணங்களை நிரப்புவது அல்லது பிற சாதனங்களைப் பயன்படுத்தி தகவல்களை அனுப்புவது ஆகியவற்றின் தேவை இனி இருக்காது என்பது சிறப்பம்சமாகும்.





# தோட்டாக்களுடன் ஒருவர் பருத்தித்துறையில் கைது

கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தும் தோட்டாக்களை உடைமையில் வைத்திருந்த ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை – அம்பன் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அவசர உதவிப் பிரிவுக்கு தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் வீடொன்றில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட சோதனையில் கைத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 6 ரவைகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அங்கு வசிப்பவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைந்து பிரதமருக்கு பொப்பிமலர் அணிவிப்பு

இலங்கை முன்னாள் பாதுகாப்பு பணியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு குறியீட்டு ரீதியாக பொப்பி மலரை அணிவித்தனர்.

உலகளாவிய ரீதியில் யுத்தத்தின் போது உயிர்நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் உலக பொப்பி மலர் தினம் எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதியாகும்.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக உலக பொப்பி மலர் தினத்தை எதிர்வரும் 14ஆம் திகதி மிகவும் எளிமையான முறையில் கொண்டாடுவதற்கு இலங்கை முன்னாள் பாதுகாப்பு பணியாளர்கள் சங்கத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

பொப்பி மலர் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாய் ஒவ்வொரு ஆண்டும் பிரதானமாக ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும். இலங்கை முன்னாள் பாதுகாப்பு பணியாளர்கள் சங்கத்தால் வெளியிடப்பட்ட வருடாந்த சஞ்சிகையில் இதன்போது அச்சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உபுல் பெரேராவால் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், இலங்கை முன்னாள் பாதுகாப்பு பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உபுல் பெரேரா, உப தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) மஹிந்த அம்பன்பொல் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர்.

# யாழில் கோடரி வெட்டுக்கு இலக்காகி இருவர் படுகாயம்

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கோடரி வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

காயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலை நடத்திய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2021இல் வெளியிடப்பெற்றது.